முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 26 ம்நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்- பங்குனி திங்கள் 12 ம்நாள்)

இடைநிலை மனு எண்.1/2026
அசல் வழக்கு எண்.49/2023

முனியப்பன் .. மனுதாரர்/வாதி

// எதிர் //

1. வையாபுரி கவுண்டர் (இறந்துவிட்டார்)
2. சின்னசாமி
3. சசிகாந்த்
4. கே.தங்கமுத்து ..எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

03.03.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 25.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.கே.நந்தகோபால், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.டி.செந்தில்குமார், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும். 4 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>உத்தரவு</u>

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதில் 1ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்கள் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், பூர்வீக சொத்துக்களில் வந்த வருமானத்தை கொண்டு அச்சொத்து வாங்கப்படவில்லை என்றும், 4ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருப்பதாகவும் பல சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது. அதனை பொறுத்து மறுத்து பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஏற்க வேண்டுமென்று சொல்லப்பட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 4<u>ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்::</u>

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது யாதெனில், 4ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு எதிர்வழக்குரையை 19.07.2021ல் தாக்கல் செய்துள்ளார். ஆகவே வாதிக்கு மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகள் 4 வருடத்திற்கு முன்பே தெரியும். தற்போது அதனை பொறுத்து மறுத்து பதிலுரை தாக்கல் செய்ய கோருவது ஏற்புடையதல்ல. பதிலுரையில் புதிய சங்கதிகளையும் மற்றும் முரண்பாடான சங்கதிகளையும் சொல்லியுள்ளார். வழக்கை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். அசல் பிராதிற்கு முரண்பாடான சங்கதிகளை ஏற்றுக் கொள்ள இயலாது. மனுதாரர் நல்ல

எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:-</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் 4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்கள் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், பூர்வீக சொத்துக்களில் வந்த வருமானத்தை கொண்டு அச்சொத்து வாங்கப்படவில்லை என்றும், 4ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்று பல சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளதாகவும் அதனை பொறுத்து மறுத்து பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது.

6. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையை 19.07.2021ல் தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிக்கு மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகள் 4 வருடத்திற்கு முன்பே தெரியும் என்றும், தற்போது அதனை பொறுத்து மறுத்து பதிலுரை தாக்கல் செய்ய கோருவது ஏற்புடையதல்ல என்றும், பதிலுரையில் புதிய சங்கதிகளையும் மற்றும் முரண்பாடான சங்கதிகளையும் சொல்லியுள்ளதாகவும், வழக்கை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

7. வழக்கு கோப்பினை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு எதிர்வழக்குரை 19.07.2021ல் தாக்கல் செய்துள்ளார். தற்போது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது.

8. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை பரிசீலனை செய்கையில், அதில் 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த

எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து சொல்லப்பட்டுள்ளது. புதிய சங்கதிகளோ, முரண்பாடான சங்கதிகளோ சொல்லப்படவில்லை. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், வழக்கு விசாரணைக்கு முந்தைய நிலையில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதாலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 26 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.26 20:02:32 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.26 20:02:37 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.1/2026
அ.வ.எண்.49/2023
நாள் 26.03.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.